# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.. 90/2019 தேதி-10.04..2026

(P.W.2) . அருள்தாஸ்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் 19 வருடங்களாக வெளி நாட்டில் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் பிறந்து வளர்ந்து பாலிடெக்னிக் வரை படித்தது எல்லாம் தாவா சொத்தின் அருகாமையில் இருந்துதான் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து இருக்கும் இடம் காப்பிகாட்டுவிளை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண்ணின் (261/14) மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 38 சென்ட் ஆகும். மொத்த சர்வே எண்ணில் எனது தாத்தாவின் சொத்து எனது அப்பாவிற்கு பின்பு எனக்கு கிடைத்தது என்றால் சரிதான். தாவா சொத்து 810 சதுர லிங்ஸ் சொத்தை எனது பெரியம்மாவிடமிருந்து எனது மனைவி வாங்கியுள்ளார். எனது பெரியப்பாவின் பெயர் தங்கையன் மற்றொரு பெரியப்பாவின் பெயர் செல்லம் ஆகும். எனது தாத்தா மற்றும் அவரது மகன்களான எனது அப்பா மற்றும் எனது பெரியப்பாக்கள் இரண்டுபேருக்கும் இடையில் பாகப்பிரிவினை நடைபெற்றதா என்றால் பாகப்பிரிவினை நடைபெற்றது உட்பிரிவும் செய்யப்பட்டுவிட்டது.

மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பாகப்பிரிவினை ஆவணத்தின் நம்பர் மற்றும் ஆண்டு என்ன என்றால் எனது தாத்தாவைப் பார்த்ததில்லை. அவர்களுக்கிடையில் வாக்கால் பாகம் நடந்தது. வாக்கால் பாகம் என்று நடந்தது யாருக்கிடையில் நடந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாக்கால் பாகத்தின் அடிப்படையில் உட்பிரிவு நடந்ததாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. றீசர்வே எண் 261/14 ல் மொத்த பரப்பளவு 43.5 ஏர் என்றால் சரிதான். அவற்றை சென்றில் குறிப்பிட்டால் 87 1/4 சென்ட் என்றால் சரிதான். றீசர்வே எண் 261/14 ன் எல்கையில் அமைந்திருக்கும் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் தெரியாது.

வழக்கு பட்டிகை சொத்து 810 சதுர லிங்ஸ்சின் எல்கை என்ன என்றால் கிழக்கே ராஜ் என்பவரின் சொத்து, தெற்கே ரோடு, மேற்கே முருகேசன் வீடும் எனது சொத்தும், வடக்கே ராஜ் என்பவரின் சொத்து உள்ளது. றீசர்வே எண் 261/14 ன் எல்கையை குறிப்பிட்டு காட்டுவதற்காக ஆவணம் ஏதாவது என்னிடம் இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். வழக்கு பட்டிகை சொத்தின் எல்கை எதுவும் எனது கண்டத்தை தொட்டு வரவில்லை என்றால் சரியல்ல தொட்டுதான் வரும்.

வா.சா.ஆ- 1 ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்தின் எல்கையில் எங்காவது எனது சொத்து இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கிழக்கு எல்கை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாதை என குறிப்பிடும் பகுதி கிழக்கு எல்கையில் உள்ளது என்றாலும் பாதை இருந்த இடத்தை குறிப்பிடாமல் வா.சா.ஆ. 1 ஆவணத்தை தயாரிக்கப்பட்டது என்றாலும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் எல்கை குறிப்பிடாமல் இருக்கும் சொத்து செல்லுபடி ஆகக்கூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஆவணப்படியோ, முன்னர் எனக்குரிய சொத்து என குறிப்பிட்டதன் அடிப்படையில் வழக்கு பட்டிகை சொத்தை திட்டப்படுத்த முடியாது என்றால் சரியல்ல.

வா.சா.ஆ. 1 ஆவணத்தில் வரைபடம் இணைப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் 261/14 ல் உள்ள மொத்த பரப்பளவு 43.5 ஏரில் வடக்கணைய உள்ள சொத்து வழக்கு பட்டிகை சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கணைய என குறிப்பிடப்பட்டுள்ளதில் நீளம், அகலம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வடக்கு எல்கை சரியாக நீள அகலத்துடன் குறிப்பிட்டு கூறாததால் தெற்கு எல்கையை நிர்ணயிக்க முடியாது என்றால் சரியல்ல. வாதி இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை காண்பிக்க ஏதாவது முன்ஆவணம் வரைபடத்துடன் என்னிடம் உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது. அதை தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

பிராதில் கிழக்குஎல்கையாக தாஸ் என்பவரின் சொத்து குறிப்பிடப்பட்டது எதன் அடிப்படையில் என்றால் அதைப்பற்றி தெரியாது. தாஸ் என்பவரின் சொத்து கிழக்கு எல்கையில் இல்லை ராஜ் என்பவரின் சொத்துதான் கிழக்கு எல்கையில் உள்ளது. ராஜ் என்பவரின் சொத்தை கிழக்கு எல்கையாக குறிப்பிட்டிருப்பது ஆவணத்தின் அடிப்படையிலா என்றால் ராஜ் என்பவரின் சொத்து கிழக்கேயும் வடக்கேயும் உள்ளது. ராஜ் என்பவரின் சொத்து ஆவணத்தின் அடிப்படையில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தை எந்த ஆவணமும் இல்லாமல் உண்மைக்கு முரம்பாக

எல்கை குறிப்பிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஆவணத்திலோ அல்லது பிராதிலோ சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை.

வழக்கு பட்டிகை சொத்தை காண்பிக்க முன் ஆவணம் எதுவும் இல்லாததால் றீசர்வே எண் 261/14 ல்தான் உள்ளது என்பதைக் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் சரியல்ல. பழைய சர்வே எண் 1729 ன் கார்லேசன் சர்டிபிகேட் என்னால் தாக்கல் செய்யமுடியும். வழக்கு பட்டிகை சொத்தின் கிழக்கு எல்கை எத்தனை அடி நீளம் என்றால் 20 அடி நீளம் இருக்கும். மேற்கே எத்தனை அடி நீளம் இருக்கும் என்றால் 10 அடி நீளம் இருக்கும். கிழக்கே ராஜ் என்பவரின் காம்போண்ட் சுவரும் மேற்கே முருகேசன், சுமதி ஆகியோர்களின் சொத்தின் காம்போண்ட் சுவர் உண்டு என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்து ராஜ் என்பவரின் வீட்டின் வடக்கு பக்கம் தொட்டு உள்ளது என்றால் சரிதான். ராஜினுடைய சொத்தின் 4 பக்கத்திலும் காம்போண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்து மற்றும் முருகேசன் சொத்து மற்றும் ராஜ் சொத்தின் தெற்கு பக்கம் வெள்ளியாவிளையிலிருந்து ஈச்சுவிளைக்கு செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான்.

முருகேசன் மற்றும் ராஜின் சொத்தின் தெற்கு பக்கம் காம்போண்ட் சுவர் மற்றும் கேட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டு காம்போண்ட் சுவரின் இடையில் இருக்கும் பகுதியின் வீதி எவ்வளவு இருக்கும் என்றால் 10 அடியிருக்கும். 10 அடியில் தொடங்கி முக்கோணமாக முடியும் வழக்கு பட்டிகை சொத்து எவ்வளவு அடி இருக்கும் என்றால் முருகேசன் சொத்தின் கிழக்கு பக்கம் 10 முதல் 15 அடியிருக்கும். ராஜ் சொத்தின் மேற்கு பக்கம் 15 அடியிருக்கும். ராஜ் சொத்தின் மேற்கு பக்கம் எத்தனை அடி நீளம் இருக்கும் என்றால் 30 அடி நீளம் இருக்கும். முருகேசனின் சொத்தின் கிழக்கு அதிர் முடிவதுடன் வழக்கு பட்டிகை சொத்தின் எல்கை முடிவடைகிறது என்றால் சரிதான். அதைத்தொட்டு வடக்கு பக்கம் இருப்பது என்னுடைய சொத்து என்றால் சரிதான்.

நான் குறிப்பிடுவதுபோல் வழக்கு பட்டிகை சொத்து முக்கோணமாக இருந்தால் வழக்கு பட்டிகை சொத்தின் வடக்கு பக்கத்தை அடைக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவரது வீட்டிற்கு செல்வதற்கு ரோட்டிலிருந்து நான் முன்பு கூறியதுபோல் 30 அடி என்றால் சரிதான். மேற்படி பாதையைதான் பிரதிவாதிகள் வழிப்பாதையாக உபயோகித்து வருகிறார்கள் என்றால்

சரியல்ல. பிரதிவாதிகள் மேற்படி 30 அடியிலிருக்கும் வழிப்பாதையை தவிர்த்து வேறு எந்த வழிப்பாதையை உபயோகித்து வருகிறார்கள் என்றால் கிழக்கு பக்கம் வழிப்பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள். பிரதிவாதியின் சொத்தை சுற்றி காம்போண்ட் சுவர் உள்ளது என்றால் சரியல்ல. அந்த வீடு தெற்கு பக்கம் பார்த்துள்ளது என்றால் சரிதான். ராஜ் மற்றும் முருகேசன் சொத்தின் தெற்கு பக்கமிருக்கும் ரோட்டிலிருந்து பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லவேண்டுமென்றால் மேற்படி வழிப்பாதையை உபயோகித்துதான் தெற்கு பக்கம் பார்த்திருக்கும் வீட்டை அடைய வேண்டுமென்றால் சரியல்ல.

பிரதிவாதியின் சொத்திலிருந்து கிழக்கு பக்கத்திலிருந்து தெற்கு ரோட்டிற்கு வரலாம். வடக்கு பக்கத்திலிருந்து வெள்ளியாவிளையிலிருந்து தக்காளிவிளைக்கு செல்லமுடியும். மேற்படி இரண்டு பாதையை காண்பிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து நிரூபிக்க முடியுமா என்றால் அதுபற்றி எனக்கு எந்த விபரமும் தெரியவில்லை. பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் நியமன மனுவை தள்ளுபடி செய்ய கோரினேன் என்றால் சரிதான். வாதி, பிரதி ஆகிய இருவரும் சேர்ந்து நீதிமன்ற ஆணையரை நியமிக்க சம்மதமா என்றால் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. பிரதிவாதிகள் 30 அடி நீளமுள்ள பாதையைத்தான் உபயோகித்து தெற்கே உள்ள ரோட்டிற்கு வருகிறார்கள், நான் கூறுவதுபோல் கிழக்கு பக்கமும் வடக்கு பக்கமும் மாற்று வழிப்பாதை இல்லை என்றாலும் அதை நிரூபிக்க ஆணையர் நியமனம் செய்ய முடியுமா என்றால் முடியாது.

பிரதிவாதிகளுக்கு மாற்று வழிப்பாதை இல்லாததாலும் அவர்கள் வழக்கு பட்டிகை சொத்தை வழிப்பாதையாக உபயோகித்து வருவதால் அத்தகைய நிலமை நீதிமன்றத்திற்கு தெரிந்துவிடும் என்பதால் ஆணையர் நியமனம் செய்ய முடியாது என கூறுகிறேன் என்றால் சரியல்ல. முருகேசன் சொத்திற்கு வடக்கே எனது சொத்தும் அதைத்தொட்டு வடக்கே என்னுடைய மற்றொரு சொத்தும் உள்ளது அதிலிருந்து வடக்கேயிருக்கும் ரோட்டிற்கு செல்லமுடியும் என்றால் சரிதான். தாவா சொத்தை வாங்கியதன் காரணம் நான் அனுபவித்து வரும் சொத்தின் தெற்கு பக்கம் இருக்கும் ரோட்டை அடைவதற்காக என்றால் சரியல்ல. முருகேசன் சொத்தின் வடக்கு பக்கம் இருக்கும் என்னுடைய சொத்திலிருந்து தெற்கே வரவேண்டுமென்றால் வழக்கு பட்டிகை சொத்தின் வழியாகத்தான்

வரவேண்டுமென்றால் சரிதான்.

பாதையாக இருந்த இடத்தை வழக்கு பட்டிகை சொத்தாக ஏற்படுத்தி ஒரு ஆவணத்தை உண்டு பண்ணி பிரதிகளுக்கு அவர்களது வீட்டிற்கு போகமுடியாத நிலமையை ஏற்படுத்தி பிரதிவாதிகளின் 2 1/2 சென்டை அபகரிக்க வேண்டுமென்று இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிகள் சொத்தை வாங்கியது 1995 ல் வாங்கி 1996 ல் வீடு வைத்து குடியிருந்து வருகிறார்கள் என்றால் அது பற்றி தெரியாது. மின்இணைப்பு எடுத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் எடுத்திருக்கலாம். வழக்கு பட்டிகை சொத்தின் வழியாகத்தான் மின்இணைப்பு பிரதிவாதிக்கு செல்கிறது என்றால் சரியல்ல. அதை நான் மறுப்பதினால் நீதிமன்றத்தின் மூலம் ஆணையர் நியமித்து தெளிவுபடுத்த முடியுமா என்றால் அதற்கு சம்மதம் இல்லை.

வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பிரதியோ அவரது கணவரோ சாட்சியாக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் முருகேசனோ, ராஜோ அல்லது வழக்கு பட்டிகை சொத்தின் அருகில் வசிக்கும் வேறு நபர்களோ சாட்சிகளா என்றால் அதைப்பற்றி எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு சாட்சிகள் யாரும் இல்லாததால்தான் தற்போது அதைப்பற்றி ஞாபகமில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தங்கையனுக்கு அவரது மனைவி கனகம்மாள் மற்றும் 3 பெண்பிள்ளைகள் உள்ளனர் அவர்களில் யாராவது சாட்சி கையெழுத்து வா.சா.ஆ. 1 ல் இட்டுள்ளார்களா என்றால் ஆவணத்தை பார்த்தால் தெரியும். வா.சா.ஆ. 1 ஆவணத்தை அருகில் இருக்கும் நபர்களின் சாட்சியம் இல்லாமலும் வேறு தெரிந்த எந்த நபர்களை சாட்சியம் இல்லாமலும் கள்ளத்தனமாக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

தாவா சொத்தான 810 சதுர லிங்ஸ் தங்கையனுக்கு எந்த உரிமையும் ஏற்படுத்த முடியாத சொத்து என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் நீசர்வே எண் 261/14 ல் 43.5 ஏரின் பகுதி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. 810 சதுரலிங்ஸ் என தாவா சொத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 261/14 ல் எனக்கு வேறு உரிமைப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்தின்படி பார்த்தால் வழக்கு பட்டிகை சொத்திற்கான கரத்தீர்வை ரசீது வாதியின் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 3 ஆவணம் நீசர்வே எண் 261/14 ன் வில்லங்க சான்று என்றால் சரிதான். வா.சா.ஆ- 3 ஆவணத்தில் நீசர்வே

எண் 261/14ன் பகுதியை மட்டும் காண்பித்துவிட்டு மீதமிருக்கும் பகுதியை காண்பிக்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் கள்ளத்தனம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.4 ஆவணம் வழக்கு பட்டிகை சொத்தின் பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணத்தில் வாதிக்கு எழுதிக்கொடுத்த கனகத்தின் பெயர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 4ல் கனகத்தின் பெயர் வராததால் கனகத்திற்கு உரிமைப்பட்ட சொத்து என்பதை நிரூபிக்க மேற்படி ஆவணம் தகுந்தது அல்ல என்றால் சரியல்ல. வாதிக்கு விலை கொடுத்த கனகத்திற்கு முன் ஆவணமோ, பட்டாவோ, கரத்தீர்வை ரசீதோ இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ- 3ல் முன்ஆவணம் என குறிப்பிடப்பட்டிருக்கும் காளத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ- 5 ஆவணமானது நான் கருங்கல் காவல்நிலையத்தில் 15.05.2019 ல் கொடுத்த புகார்மனுவிற்கான சிஎஸ்ஆர் என்றால் சரிதான். புகார்மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 28.12.2018 ல் பிரதிவாதி எனக்கு எதிராக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி வழிப்பாதைக்காக கொடுத்த புகாருக்காக நான் கொலை மிரட்டல் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதற்கு எதிராக நான் 2019 ஆம் ஆண்டு கருங்கல் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதன்பின்னர் 25.02.2019 அன்று மாவட்ட கண்காணிப்பாளருக்கு நான் புகார் கொடுத்து மாவட்ட கண்காணிப்பாளர் என்னை கண்டித்து அனுப்பினார் என்றால் சரியல்ல. மேற்படி புகாருக்கு எந்த நடவடிக்கையும் எடுக்காததால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் காவல் கண்காணிப்பாளர் இதை உரிமையியல் வழக்கு என்பதால் உரிமையியல் வழக்கு தொடர்ந்து பரிகாரம் கேட்டுக்கொள்ளும்படி கூறியுள்ளார்.

பிரதிவாதி எந்த தவறும் செய்யாததால்தான் அவர்மீது எந்த நடவடிக்கையும் காவலர்களால் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தங்கையனுக்கு இந்த சொத்தில் இருந்த அவகாசத்தை அவரது மகள் விமலாவிற்கு கொடுத்ததால் மனைவிக்கு அவகாசம் வராது எனவேதான் பட்டாவில் கனகத்தின் பெயர் வரவில்லை என்றால் சரியல்ல. அவர்களுடைய நடைபாதையை தடைசெய்து அவர்களை ரோட்டிற்கு வரமுடியாமல் செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு பட்டிகை சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்ததாக

கூறியுள்ளேன் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் மரமோ, எந்த கட்டிடமோ இல்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் இழப்பீடு ஏற்படுத்த எந்த பொருளும் இல்லை என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் குப்பைகளை கொட்டி தொல்லை கொடுப்பதாக வாதி குறிப்பிட்டுள்ளார். உண்மையில் அங்கு குப்பைகளை கொட்டியிருந்தால் அருகில் இருக்கும் முருகேசன் புகார் கொடுத்திருப்பார். அவ்வாறு புகார் ஏதாவது அவர் கொடுத்துள்ளாரா என்றால் பஞ்சாயத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. DHO விற்கு எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் வாதிக்கு எந்த உரிமையோ வாதிக்கு எழுதிக்கொடுத்த கனகத்திற்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுத்து வருவதால் வழக்கின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும். மேலும் இந்த வழக்கு எந்த மூலகாரணமும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.